உ

ஸ்ரீ ஏகாம்பரநாதர் துணை.

ஓமாந்தூர் ஏகாம்பரநாதர்

அந்தாதி.

இஃது
திருச்சி வரகநேரி ஆ. ஏகாம்பரம் பிள்ளை
குமாரரும், திருச்சி மயிலஞ்சந்தை மண்டி செ.
அண்ணாவியா பிள்ளை மருகரும், இந்
நூலாசிரியர் மாணாக்கர்களிலொருவருமாகிய

ஏ. பெரியண்ண பிள்ளை

வேண்டுகோளின்படி

திரிசிரபுரம் இலக்கண உபாத்தியார் கனம்
பிச்சை இபுறாகீம் புலவரவர்கள் மாணாக்கரு
ளொருவரும் முனியப்ப செட்டியார்
குமாரருமாகிய

சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள்

இயற்றியது.

உ

சிவமயம்.

தேவி சகாயம்.

முன்னுரை.

"போகம்பலவளிக்கும் போர்க்குகனையீன்றகச்சி
ஏகம்பனை யேத்துவாம்".

சந்தனமலயம் பைந்தமிழ் முனிவராகிய அகத்தியனாருக்குத் தமிழறிவுறுத்திய பரமாசிரியனாகிய குமாரக்கடவுளை யீன்றருளிய அம்மையார் சிவபெருமானைப்பிரிந்து, காஞ்சியிற் றவம்புரிந்து வருகையில் "தணந்தபெருந்துயர்க் கடன் மீக்கூர் தலினான்மலை பயந்ததரளமூறற்—கணங் குழை யாள்புரி பூசைமுடியளவுந் தரியாம லிடையே கம்பை—யணங்கினைத் தூதென விடுத்துவலிந் திறுகத் தழீஇக் கொள்ள வமையாக்காதல்—மணந்தருளிக் குறி பூண்ட வொருமாவிற் பெருமானை வணக்கஞ் செய்வாம்" என்று ஆன்றோர் கூறியவண்ணம் தன்னைப் பிரிந்த தலைவியை நினைத்து, பெருந்துயரடைந்து, கம்பையணங்கை தூதுவிடுத்து, காட்சிதந்தருளி, ஏகனாதனாய் விளங்கிய பெருமான், தென்திசைக்கேகி திருச்சிராப்பள்ளிக்கு வடபாலுறையும் ஓமாந்தூரென்னு முத்தமப்பதியில நந்தவம் புரியும் உரோமர்தலமெனக் கருதியும், கங்கை மரபிற்

ஷேரேன்றிய காராளராகிய அம்மையப்பன் கருத்துக் கிசைந்து காட்சிதந்தருளியும் விளங்காநின்ற பரம்பொருளாகிய ஏகாம்பரநாதனிணேயடி மலர்க்குச்சாத்திய, இந்நூலைப் பாடித்தருகவென பலமுறை யென்னுசான்பத மலரை வணங்கிக் கேட்டதின்பொருட்டு இச்சிராப்பள்ளி குருவியங்குளத்தெருவில் வணிககுலத் திலகராய் விளங்கி முத்தியடைந்த பக்திமானுகிய முனியப்ப செட்டியார் மாதவப் புத்திரரும் தமிழ்போதகாசிரியரும் இச்சிராப்பள்ளி சர்க்கார்பேட்டையில் புகையிலை வியாபாரஞ் செய்யும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மு. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் அதிக பக்தியுடனும் பாலன் றயர் தீர பாடியருளினுர். இவர் பாடிய இச்செய்யுட்கள் சொற்குணமும் பொருட் பொலிவும் அமைந்துளதாலாதலின் இந்நூலை பக்திமான்களனைவருங்கற்று; ஓமாந்தூரி லெழுந்தருளிப் பிரணவ சொரூபமாய் விளங்கும் பெருமானுகிய ஏகாம்பர நாதன் திருவடி மலரைச் சிந்தை செய்து உய்யுமாறு பிரார்த்திக்கின்றனன்.

ஆ. ஏ. பெரியண்ணன்,
திரிசிரபுரம் வரகனேரி,

O;12MSC2,0
N23

உ

சாற்றுக்கவிகள்.

திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தலைமைத்
தமிழ் பண்டிதர்
மு வேங்கடசாமி நாட்டார்
அவர்கள் கூறிய
வெண்பா.

சீர்வள ரோமாந்தூர்ச் சிவனார் திருவடிக்குத்
தார்வள ரந்தாதியொன்று சாத்தினான்—ஏர்வளரும்
தண்டமிழின் சொன்மலரால் தற்பரனுக் கற்புமிகு
வண்கவிஞன் சுப்ரமணியன்.

சோழமாதேவி இலக்கண உபாத்தியாயர்
கனம் வித்துவான் குப்புசாமி பிள்ளை
அவர்கள் இயற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்மேவு மோமபுரி யேகாம்ப நாதருக்குச்
சிறந்து தோன்றிப்
பார்மேவு கவிவாணர் புகழொரு வந்தாதி
பாடி னனால்
வார்மேவுஞ் சிரபுரம்வாழ் முனியப்ப மகிபனுக்கோர்
மைந்த னான
பேர்மேவு மிலக்கணநூல் முழுதுணர்ந்த சுப்ரமண்யப்
பெயரோன் மன்னோ.

85805

திரிசிரபுரம் வரகநேரி
ஸ்ரீலஸ்ரீ தி. ம. பொன்னுச்சாமி பிள்ளை
அவர்கள் இயற்றிய
ஆசிரியப்பா

கடனிறவண்ண னுங் கமலத்தய னுங்
தேடியுங்காணுச் சிவபரம்பொருளை
அகமதி லுன்னி யன்புடன்முன்னாண்
முயன்றநற்றவத்தார் கிட்டத்தமானிட
வாக்கையதனு லரனடிநீழ
றங்கவும்பிறவி சாராவண்ணமு
முரோமரிஷியுறையோ மாந்தூர்தனிற்
றங்கநற்பிறைநுத றுடியிடைமுளரிதாண்
மங்கைகாமாக்ஷியை மணந்தமுக்கண்
முழுமுதலேகாம் பரன்முடிக்கணிய
யிலகியமாலை யியற்றிச்சாற்றின
னியாவனெனினியா னியம்புவன்கேண்மதி
எந்தமர்க்குறிய வெழிற்குருசோம
சுந்தரக்கவிஞனை சொன்னயம்பொருணயம்
புகட்டவாசானுகப் புலத்தமைத்
தாயிரம்படாமுடி வாதிசேட னுங்
தாமுடிதுளக்கவுந் தகைமைசான்மிக்க
நாவலர்மெச்சவும் பாவலர்புழுங்கவும்
காவலர்போற்றவுங் கம்பன்வியக்கவுந்
தந்தைநாம நிறுவமுனிசாமி
மைந்தனுகவந் தவதரித்த
சிரபுரங்குருவியங் குளமதிலுறைபவன்
சுப்பிரமணியனுந் தூயநாவலனே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஓமாந்தூர் ஏகாம்பர நாதர்

அந்தாதி.

விநாயகர் காப்பு.

வெண்பா.

ஓமபுரிவாழு மோமாமே காம்பரன்மேற்
றேமருவு மந்தாதி செப்புதற்கு—வாமமிகு
போர்க்குஞ் சரத்துரிவைப் போர்க்கும் பரனீன்ற
கார்க்குஞ் சரப்பதமே காப்பு.

நூல்.

கட்டளைக் கலித்துறை.

திருவே யெனக்குப் பெருங்கல்வி யீந்த செழுங்குருவே
யுருவே யடியார் மனத்தே வரைந்திட்ட வோவியமே
மருவே சுகந்த மணமல ரேநின் மலர்ப்பதத்தைத்
தருவீரே காம்பர வோமாந்தூர் வாழுந் தயாநிதியே. (1)

நிதியே யெனக்களி யென்பவர் வாழ நிதியளிக்கும்
பதியே பதிதொறு வாழுமே கம்பப் பசுபதியே
மதியே மதியணி மாணிக்க மேநினை வாழ்த்து மின்பக்
கதியே யெனக்கரு ளோமாந்தூர் மேவிடுங் கண்மணியே.( )

கண்மணி போன்றொளிர் சேய்தன் கனிவா யிதழ்திறந்து
பண்மணி யேயெனப் பாடுந் திறமருள் பண்பதுபோ
லெண்மணி யாய்த்தமி ழிச்சேயுங் கூற வமுதளிப்பாய்
விண்மணி போன்றொளி ரோமாந்தூ ரேகம்ப வித்தகனே, ()

வித்துரு மத்தை நிகர்மேனி யாய்தீ வினைஞ்ஞரஞ்சப்
பத்துருக் கொண்ட நெடுமா றனைமகி ழும்பரமா
சத்துரு வென்னை யணுகாம லின்னலி தந்திடுவாய்
முத்துறு பண்ணைசூ ழோமாந்தூ ரேகம்ப முன்னவனே. ()

முன்னம் பதம்பணி மார்க்கண்டற் காக முனிந்தெமனை
பின்னம் புதல்வற்குப் பேரின்ப மீந்திடும் பெற்றியைப்போல்
சின்னஞ் சிறுவன் செயலால் வருந்துயர் தீர்த்திடுவாய்
பொன்னம் பணியணி யோமாந்தூ ரேகம்பப் புத்தமுதே. ()

புத்திர னின்றி வருந்துவர் தந்துயர் போக்கிமிகு
சித்தியு முத்தியுஞ் செல்வமு மீயுந் திறனுடையாய்
எத்திசை யும்புக ழோமா புரிவள ரேகம்பனே
பத்தி யெனக்கரு ளெந்நாளு முன்னைப் பணிந்திடவே. (6)

பணியும் புலியும் பனிமதி யேயும் படர்சடையு
மணியு மணிய லணிந்திடு மார்பு மருட்கடையு
மணியு மணிகண்ட முங்கண்ட வன்பர்தம் வல்வினைதாந்
தணியுந் தணியுமோ மாபுரி யேகம்பத் தாண்டவனே. (7)

தாண்டவஞ் செய்து தழலுரு வாகித் தரையிடத்தே
வேண்டிய நல்வர மீந்திடு மேகம்ப வித்தகனே
பூண்டபு லன்களைந் தாசைக் கடறனைப் போக்கிநின்று
தாண்டகவாழ்வதென் றோமாந்தூர் மேவிடுங்கற்பகமே. ()

கற்பகத் தோனு மலர்மே லயனுங் கரியவனும்
பொற்புறத் தோன்றமுப் பத்துமுக் கோடிப் புலவர்களும்
சிற்பரனைமற வாச்சிந்தை நாற்பத்தெண் ணுயிரரு
முற்பணிந் தேத்துறு மோமாந்து ரேகம்ப முக்கண்ணனே.

கண்ணப்ப னன்று கடித்துமி ழூனைக் கனிவுடனே
யுண்ணப்ப னேயுயர் மாவிடை மீதி ளொளிர்மணியே [றன்
வண்ணப்பொன் மேனியுடையாய் துயர்கொண் டுவாழ்த்துமென்
விண்ணப்பங்கேட்டருளோமாந்துரேகம்பமெய்ப்பொருளே.()

மெய்யாகித் தோன்றிடும் பேரின்ப வீட்டை மிகவெறுத்துப்
பொய்யாகித்தோன்றும் புவிமாய்கை தன்னிற் புரண்டுழல்வே
னையா வெனக்கருள் செய்யாதிருப்ப தருட்கழகோ
செய்யாரு மோம புரிவாழேகம்பச் செழுஞ்சுடரே. (11)

சுடராழி யோனை மகிழ்பர மாவச் சுரர்களுய்யப்
படராழி நஞ்சுண் களத்தா யெருமைப் பகட்டினையூ
ரடராழி யன்ன நமனென்னை யென்று மணுகியிடா
திடராழி நீக்குவை யோமாந்து ரேகம்ப வென்னப்பனே.

அப்பனை யாண்பனை பெண்பனை யாக வருளிமற்றும்
பொற்பணை யெற்பினைப் பெண்ணுருவாக்கும் புனிதன்றனை
யொப்பனை யாக மகிழ்பர மாவுன் னருட்பொடியை
யெப்பொழு தப்புவையோமாந்தூர் வாழு மிறையவனே. ()

இறைப்பொழுதேனுமிருகண்பனிப்பவிறைஞ்சுகில்லேன்
கறைப்படி கண்டத்துக் கண்மணி யேயருட் கற்பகமே
விரைப்பொடி பூசிய வித்தக மேயென் வினைத்துயர்தீர்
மறைப்படி வத்தர் புகழுமோ மாபுரி மாணிக்கமே. (14)

மாணிக்க மாரன் மலர்க்கணைக் கேயிட மாகிநின்றேன்
பேணிக்கை யார மலர்சொரிந் தேத்தியிப் பேருடலை
காணிக்கை யாயுனக் கீந்தில னந்தார் கழனியின்கண்
வாணித் திலமொளிர் தாரக மம்பதி வாழ்பவனே. (15)

வாழநி னைக்கு மனமே யேகம்பன் மலரடியிற்
றாழநி னைந்திலை மின்னார்க டுன்பத் தடங்குழியில்
வீழவி ரும்பினை யிஃதுமுன் னாளின்வி திப்படியோ
வேழமி கும்பணை யோமாந்து ரெங்ஙன மெய்துவையே ()

மெய்ப்படு போகத்தை வீட்டி நிரையம் விளைக்குமிந்த
பொய்ப்படுவாழ்க்கையைப்போற்றிநின்றேன்புகழோமபுரி
வைப்பனை யாயென் னுயிரே யருட்பெரும் வாரிதியே
செப்பிணை யந்தனக் காமாட்சி யம்மையின் சேவகனே ()

சேவேறி யெந்தநற் சிந்தனை யேறிநற் றேவர்மனப்
பூவேறிப் பாண்டியன் பூந்தவி சேறிப் புலவர்கடம்
பாவேறிப் போற்றும் பழமறை பேறும் பரம்பொருளென்
நாவேறி வாழ்குவை யோமாந்து ரேகம்ப நன்மையனே()

நல்லவ ரல்லவ ரென்பவர் தம்மை நயந்தெறிந்து
புல்லவும் நீங்கவுந் தன்மையு ளாயெனப் போற்றுமறை
எல்லவிர் நற்று ரகபதி யேகம்ப யெற்கருள்வாய்
புல்லவ னாயினு மாலமுண் டாயெனப் போற்றினனே (19)

போற்றிக்கு மாரனா னற்று ரகத்தின் பொருளறிந்து
மாற்றிக்கு மாரனை யப்பொடித் தோயிந்த மாண்பதியி
னாற்றிக்கு மேத்தப் பொலிந்தனை யோபுவி நங்கையளை
யேற்றிக்கு மாரவுண் டேற்கருள் செய்யு மிறையவனே(20)

இறையவ ரென்பவ ரென்புரு கப்பணி யேகம்பனே
மறையவ மாதவர் நாடுங் கயிலை மலைக்கிறைவ
கறையவ கங்கனிங் தேத்திய வென்றனைக்கைவிட்டிடேற்
சிறையவ னம்பயி லோமாபுரிவளர் தெண்முத்தமே (21)

மேலுறை நாட்டுறை மேனகை யாதிய மெல்லியர்போ
னீலவர் ணச்சிறை மாமயி லாடும் நெடும்பொழில்சூழ்
சாலவ னந்திக ழோமாம் பதிவளர் தற்பரனே
காலையு மாலையு வேலை யெனக்குன் கழற்பணிவே (22)

வேதண்டங் தன்னைப் பணிபிணித் தன்றுவில்லாக் குனித்து
மூதண்டத் திற்றிரி முப்புரத் தாரை முறுவல்கொண்டு
வீதண்டஞ் செய்த விறலுடை யாயென் வினைதவிர்ப்பாய்
கோதண்டபாணி மகிழுமோ மாபுரிக் கொற்றவனே (23)

கொற்றிக் கிசைந்த நடனத்தர் பாதங் கொடுமனமே
நெற்றிப் பிறையிற் கரங்குவித் தேயெதிர் நின்றுபணி
வெற்றித் திறத்தொடு வீரங் தணம்புகழ் வீட்டின்பமா
மற்றிப் பலசெல்வ மீந்திடு மேகம்ப மாமணியே (24)

மாதவஞ் செய்து மலைக்குகை தன்னின் மருவநின்று
பாதவத் தின்கனி காய்சரு குண்டு பரவிநின்றோர்
போதகம் போற்றன மாதரைக் கூடிப் பலபுசித்தேன்
பாதக மெப்படிச் செல்லுவ தோமாம் பதியண்ணலே (25)

செல்லார் கருங்குழல் காமாட்சி யம்மையின் சேர்தனமாம்
வல்லார் வடுவுற்று மாகம்மை யாற்றின் மணவுருவா
யெல்லார நின்ற வெழிலுடை யாய்ச்சங்க மீன்றமுத்தும்
கல்லார நீலமும் காந்துமோ மாபுரிக் காவலனே (26)

O-;12 MSC3,0
N25

காரளர் போற்றிடக் காஞ்சியி னின்று கபிலையுட
னேரல ரேத்தும் பெரியண்ண ரோடம்மை நேசமுடன்
சீர்மல ராற்புனை யம்மையைப் பாவெனச் சேர்தரலு
நாரக லார்பணி யோமாந்தூ ரேகம்ப நண்ணினையோ (27)

நண்ணிய வோமத் தடஞ்சீ ரெம்போல்வார் நவிலுவதோ
திண்ணிய பேயுங் குடர்நோயுங் குட்டமுந் தீச்சுரமும்
புண்ணிப ராய்ந்தறி யேகம்ப நாதனைப் போற்றலின்றிப்
பண்ணிய தீமையும் போக்குமத் தீர்த்தம் படிந்தவர்க்கே()

படிமுழு தும்புக ழேகம்ப னேநின் பதமலரைக்
கடிகமழ் பூங்குவ ளைத்தார் புனைந்திடுங் கங்கைமர
படியவர் போற்றவவர்மனை புக்கு வநு தினமக்
குடிமுழு தும்பணி கொள்ளநின் ஞாய்நற் குணமென்னதோ

என்கவி யாவு மியற்கவி யன்றென் றிகழ்ந்துவிடா
துன்கவி ஞர்செவி யேற்றரு ளேகம்ப வொண்புலவோர்
நன்கவி யேற்றென்த் தண்கதிர் மாமணி நன்மனையிற்
பொன்கவி ஞர்தரு மோமாந்தூர் மேவிடும் புண்ணியனே

வாழிவிருத்தம்.

சீர்வாழி தாரகமேய்ச் செல்வக்கா மாட்சியின்றன்
பேர்வாழி யேகம்பப் பேர்வாழி—கார்வாழி
ஏர்வாழி யென்ன வியற்புலவரேத்தலுறுங்
காராளர்வாழி யென்றுங்காண்.

ஜனனுகூல் பிரஸ், திருச்சி.